DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINALPROCEDURE)
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF PREVENTION OF CORRUPTION ACT CASES MADURAI
SPECIAL CASE NO:144/11
P.W.1

DEPOSTITION OF WITNESS FOR PROSECUTION

| | |
|---|---|
| Name | :A.S.Balanathan I.F.S. |
| Father Name | : A.C. Sengottayyan. |
| Village | : Ekkatuthangal |
| Taluk | : Guindy |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 61 years /2013 |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of 19.11. 2013

மு.வி

சத்தியமாகச் சொல்கிறேன். நான் 10.9.2009ம் தேதி முதல் 4.7.2011 வரை முதன்மை தலைமை வன பாதுகாவலராக சென்னையில் பணியில் இருந்தேன். 30.6.2012ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். மேற்படி பணியில் நான் இருந்த போது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் அலுவலகத்தில் இருந்து கடித எண் R.C.172/05/F.O.R./DL நாள் 16.4.2010ல் வந்தது. அதில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வனக்கோட்டத்தில் வனச்சரகராக இருந்த வி.சொக்கலிங்கம் என்பவர் மீது திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் பதிவு செய்யப்பட்டிருந்த குற்றஎண் 4/05 வழக்கில் அவர் மீது உரிய நீதிமன்றத்தில் வழக்குத்தொடர இசைவாணை கேட்கப்பட்டிருந்தது. மேலும் அந்த கடிதத்துடன் மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூல நகல்கள், ஆகியன இணைத்து அனுப்பபட்டிருந்தன. அவைகளை நான் முழுமையாக படித்துப்பார்த்தேன். மேலும் திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் அவர்களை சென்னைக்கு எனது அலுவலகத்திற்கு வரவழைத்து இந்த வழக்கு சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் பெற்று ஆய்வு செய்தேன். அதில் ஏற்பட்ட சில சந்தேகங்களுக்கான விளக்கங்களையும் ஆய்வாளரிடம் கேட்டு அறிந்தேன். மேற்படி ஆவணங்களை முழுமையாக பரிசீலனை செய்ததில் மேற்படி வனச்சரகர் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தொடர போதிய முகாந்திரம் இருப்பதாக முழுதிருப்தி

19/11/2013

அடைந்தேன். விதிகளின் படி வனச்சரகர்களை பணிநீக்கம் செய்யும் அதிகாரம் எனக்கு இருந்ததாலும் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 19 1(சி)ன் படி இசைவாணை வழங்கும் அதிகாரம் எனக்கு இருந்தது என்றாலும் எனது அலுவலக கடித எண் T 2/ 28340/2006 நாள் 28.6.2010 கடிதத்தின் மூலம் இசைவாணை வழங்கி அதை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். நான் வழங்கிய இசைவாணை இது தான். அது அ.சா.ஆ.1. இது சம்பந்தமாக என்னை லஞ்ச ஒழிப்புத்துறை காவல்துறை ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குு.வி( எதிரி தரப்பில்)

இந்த இசைவாணை வழங்குவதற்கு முன்னதாக எதிரியின் பணிப்பதிவேடு மற்றும் பணி சம்பந்தமான ஆவணங்களை பார்வையிட்டீர்களா என்றால் பார்வையிடவில்லை. வனச்சரகர்களுக்கான தனிக்கோப்பை பார்வையிட்டீர்களா என்றால் வனச்சரகர்களுக்கு தனிப்பதிவேடு பராமரிக்கும் வழக்கம் நடைமுறையில் இல்லை. இந்த வழக்கு சம்ப்நதமான முதல் தகவல் அறிக்கையை நான் பார்வையிட்டேன். முதல் தகவல் அறிக்கையில் ஐந்து நபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.4.2010ம் தேதியிட்ட இயக்குனரின் கடிதத்தை நான் எந்த தேதியில் பெற்றுக்கொண்டேன் என்பதை நான் இசைவாணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும் நான் வழங்கிய இசைவாணையில் மேற்படி இயக்குனர் அலுவலகத்தில்ல இருந்து வந்த கடிதத்துடன் என்ன என்ன ஆவணங்களை சேர்த்து நான் பெற்றுக்கொண்டேன் என்ற விவரத்தையும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்புத் துறை அலுவலகத்தில் இருந்து எந்த தேதியில் அதிகாரி வந்தார் என்பது குறித்தோ அவர் என்ன என்ன ஆவணங்களை என்னிடம் கொடுத்தார் என்பது குறித்தோ நான் இசைவாணையில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எந்த எந்த ஆவணங்களை எந்த எந்த தேதிகளில் பரிசீலனை செய்தேன் என்ற விவரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்து எதிரிக்கு இறுதி வாய்ப்பு அறிவிப்பு வழங்கப்பட்டிருந்ததும் அதற்கு அவர் பதில் கொடுத்து இருந்ததும் தெரியவந்தது என்றால் சரிதான். எதிரியின் பதில் அறிவிப்பில் அவர் மீதான குற்றச்சாட்டு அவரால் மறுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் வரைவு குற்றப்பத்திரிக்கையையும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில் இருந்து குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த சொத்துக்கள் எதுவும் எதிரியின் பெயரில் வாங்கப்படவில்லை என்பது தெரியவந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் தணிக்கை காலம் 1.1.1992 முதல் 31.12.2001 வரை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பிறகு சுமார் 4 ஆண்டுகளுக்குப் பிறகு தான் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்யப்பட்ட தேதியில் இருந்து சுமார் 5 ஆண்டுகள் கழித்து தான் நான் மேற்சொன்ன இசைவாணையை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது

19/11/2013

இசைவாணையில் எதிரி வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்துக்கள் என்ன மற்றும் எவ்வளவு என்பதை அட்டவணையிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் வழங்கியுள்ள இசைவாணையில் அரசு முத்திரையோ அல்லது எனது தனிப்பட்ட முத்திரையோ இடப்படவில்லை என்றாலும் எனது கையெழுத்துக்கு கீழே தேதியும் இடப்படவில்லை என்றாலும் சரிதான். என்ன என்ன காரணங்களால் இசைவாணை வழங்க நான் முழுநிறைவு அடைந்தேன் என்ற விவரத்தை அ.சா.ஆ.1ல் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.ஆ.1யை ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் இயந்திர கதியாக வழங்கியுள்ளதாக சொன்னால் அது சரியல்ல.

<u>மறுவிசாரணை: இல்லை</u>

19/11/2013

சாட்சியால் திறந்த மன்றத்தில் சொல்லப்பட்டு அந்த தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யபட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

19.11.13

சிறப்பு நீதிபதி
ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு சிறப்பு நீதி மன்றம்
மதுரை.

# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXII CODE OF CRIMINALPROCEDURE)
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF PREVENTION OF CORRUPTION ACT CASES MADURAI
## SPECIAL CASE NO 144/2011
## P.W.2

DEPOSTITION OF WITNESS FOR PROSECUTION

| | |
|---|---|
| Name | **:Thiru.S.Arumugam** |
| Father Name | **:Tr.Shanmugam** |
| Village | : Sundarasolapuram. |
| Taluk | : Ponnamaravathy |
| Caste | : Kammalar |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of 21.01.2014

முதல் விசாரணை:

சத்தியமாகச் சொல்கிறேன். நான் புதுக்கோட்டை மாவட்டம் தூத்தூரில் கிராம நிர்வாக அதிகாரியாகப் பணியிலிருந்து கடந்த 31.05.2012ந் தேதி பணி ஓய்வு பெற்றேன். எனது சொந்த ஊரான சுந்தரசோழபுரத்தில் வசிக்கிறேன். இதற்கு முன்பு நான் மேற்படி மாவட்டம் திருமயம் வட்டம் திருக்களம்பூரில் கிராம நிர்வாக அதிகாரியாகப் பணியிலிருந்தபோது திண்டுக்கல் ஊ.த.க.துறை ஆய்வாளரின் வேண்டுகோளின்படி மேற்படி திருக்களம்பூர் கிராமம் சர்வே எண் 167-2ஏ மற்றும் 168 ஆகியவற்றுக்கான சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றை வேலாயுதம் மகன் சொக்கலிங்கம் என்பவர் பெயரில் உள்ளதின் சான்று நகலை வழங்கினேன். மேற்படி சிட்டா மற்றும் அடங்கல் பசலி எண் 1402, 1404 ஆகியவற்றுக்கானதாகும். மேலும் மேற்படி சொக்கலிங்கத்தின் உறவினர்களின் விவசாய நிலங்களுக்கான சிட்டா மற்றும் அடங்கல்களின் சான்று நகல்களையும் வழங்கியுள்ளேன். மேற்படி சிட்டா மற்றும் அடங்கல்கள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.2 வரிசை. சர்வே எண் 167-2ஏ மற்றும் 168 ஆகியவற்றுக்கான 1402ம் பசலிக்கான விவசாய வருமானம் ரூ.12,540- என மதிப்பீடு செய்துள்ளேன். மேற்படி மதிப்பீட்டு சான்று அ.சா.ஆ.3. அதே போல் மேற்படி சர்வே எண்களில் அடங்கிய நிலங்களின் 1404ம் பசலிக்கான விவசாய வருமானம் ரூ.6,360- என மதிப்பீடு செய்துள்ளேன். அந்த மதிப்பீடு சான்று அ.சா.ஆ.4. மேற்படி சர்வே எண் 167-2ஏ மற்றும் 168ல் கண்ட நிலங்களின் சிட்டா மற்றும் அடங்கல் வேலாயுதம் மகன் சொக்கலிங்கம் என்பவர் பெயரில் உள்ளது. அது அ.சா.ஆ.5 வரிசை.

21.1.2014

483

சர்வே எண்கள் 167-2ஏ, 168, 167-2இ, 167-2ஹச், 167-2ஜே, 167-2சி, 167-2டி, 167-2பி, 167-2ஐ, 167-2எப், 167-2ஜி, 170-3ஏ, 172-2ஏ, 172-2பி, 172-2சி ஆகியவற்றில் கண்ட நிலங்களின் 1402ம் பசலிக்கான தனித்தனி மற்றும் மொத்த விவசாய வருமானம் ஆகியவை குறித்து சான்று வழங்கியுள்ளேன். அது அ.சா.ஆ.6. மேற்படி அ.சா.ஆ.6ல் சர்வே எண் 167-2ஏ மற்றும் 168 ஆகியவற்றின் 1402ம் பசலிக்கான விவசாய வருமானம் மட்டும் மொத்தம் ரூ.12,540- என சான்று வழங்கியுள்ளேன். மேற்படி நிலங்களின் 1404ம் பசலிக்கான விவசாய வருமானம் ரூ.6,360- என சான்று வழங்கியுள்ளேன். அது அ.சா.ஆ.7. மேற்படி சிட்டா மற்றும் அடங்கல்களை வட்டாட்சியரிடம் ஒப்படைத்ததாக சாட்சி தற்போது கூறுகிறார். இது சம்பந்தமாக என்னை ஊ.த மற்றும் கண்காணிப்புதுறை ஆய்வாளர் விசாரித்தார்.

குு.வி( எதிரி தரப்பில்)

1992 லிருந்து 2001 ம் ஆண்டு வரை நான் மேற்படி திருக்களம்பூர் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.2 முதல் 7 வரையான ஆவணங்கள் எதிலும் அவை எந்த தேதியில் வழங்கப்பட்டன என்பதைக் காட்டக்கூடிய வகையில் தேதியிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சான்றுகளில் உள்ள விவரங்கள் எந்தெந்த ஆவணங்களில் இருந்து எடுக்கப்பட்டது என்பது குறித்த விவரம் அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேலே நான் சொன்ன சர்வே எண்களில் கண்ட நிலங்களில் ஆண்டுக்கு ஒரு போக சாகுபடி செய்யப்படுகிறது. அதே சமயத்தில் மழை பெய்யும் சமயத்தில் இன்னொரு போக சாகுபடியும் செய்யப்படுகிறது. மேற்படி நிலங்களில் அதிகமாக நிலக்கடலை, நெல் மற்றும் தென்னை ஆகியன பயிர் செய்யப்படுகிறது என்றால் சரிதான். ஆண்டுக்கு ஆண்டு காலத்திற்கேற்றாற்போல் விவசாயமும் அதிலிருந்து வரும் வருமானமும் வேறுபடும் என்றால் சரிதான். நெல்லைவிட நிலக்கடலை மற்றும் தென்னையில் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்றால் சரிதான். நான் மதிப்பீடு செய்துள்ள தொகைகள் உத்தேசமானது என்றால் சரிதான். நான் செய்துள்ள மதிப்பீடு கூடுதலாகக் கூட இருக்க வாய்ப்புள்ளது என்றால் அதை என்னால் மறுக்கமுடியாது. நான் எந்தவிதமான ஆவணங்களையும் ஒப்பீடு செய்யாமல் ஊழல் தடுப்பு துறை அதிகாரிகள் கேட்டதன் பேரில் யூகத்தின் அடிப்படையில் மேற்படி அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7 வரையான ஆவணங்களை வழங்கியுள்ளேன் என்றாலும் அதனால் தான் சரியான விவரங்கள் அ.சா.ஆ.2 முதல் 7 வரையான ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், தேதியும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

21.1.2014

சாட்சியால் திறந்த மன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

21.1.14
சிறப்பு நீதிபதி
ஊழல் மற்றும் லஞ்சத் தடுப்பு சிறப்பு நீதி மன்றம்
மதுரை.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

Spl C.C. NO. 35 /2014

அசா : 3

பெயர்:திருமதி.சிகஸ்தூரி

தகப்பனார் பெயர் : ம.சின்னதுரை

கிராமம்: சென்னை

தாலுகா: சென்னை,

தொழில் அரசுபணி, கண்காணிப்பாளர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வண்டலூர்

மதம்: இந்து

வயது : 48 .

தேதி: 02.02.2016

1873 ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10 ன் படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநர்அலுவலகத்தில் கண்காணிப்பளாராக பணிபுரிகிறேன். நான் 1994 – 1998 ம் வருடம் வரை சேலத்தில் உள்ள மாவட்ட வன அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்தேன். 1.7.2004 ம் தேதியன்று சேலத்தில் நான் பணிபுரிந்த போது மாவட்ட வன அலுவலர் உத்தரவின் பேரில் திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு மற்றும் குற்றப் புலனாய்வு துறைக்கு எதிரியின் 1.1.92 முதல் 6.9.93 வரையிலான **Property statement** படிவம் 1 முதல் 5 மற்றும் அவரது **Pay Drawn Particulars** யும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தேன். அவ்வாறு நான் அனுப்பிய கோப்பு அதசாஆ.8 . இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

ஆவணங்களில் கையெழுத்திடும் அதிகாரம் எனக்கு கிடையாது. நான் அனுப்பிய ஆவணங்கள் புகைப்பட நகல் என்றால் சரிதான். அந்த அசதசாஆ.8 ஆவணங்களில் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது என்று குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு இல்லை .நான் இந்த ஆவணம் அனுப்பிய காலத்தில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரியவில்லை என்றால் சரிதான். எதிரி எந்தெந்த கால கட்டத்தில் எந்தெந்த ஊர்களில் வனத்துறையில் பணிபுரிந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வனத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் பணியாற்றும் நிலை மற்றும் இடங்களை பொறுத்த மட்டில் ஊதிய வேறுபாடு இருக்கும் என்றால் சரிதான். சாட்சி அடிப்படை ஊதியத்தை பொறுத்தவரை மாறுபாடு இருக்காது என்கிறார். **Allowance** ஐ பொறுத்து மாறுபடும் என்கிறார்.ஒரு ஊழியர்

கசிகஸ்தூரி
02-02-2016.

சம்பளமாக பெறக்கூடிய தொகையில் அந்தந்த நபர் பெறும் Allowance சேர்ந்து தான் சம்பளம் பெறுவர் என்றால் சரிதான்.அதசாஆ.8 ஐ பொறுத்தமட்டில் நான் சாட்சியம் அளிக்க தகுதியற்றவர் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, in my presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

2/2/16

Chief Judicial Magistrate
Dindigul

02/02/16

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

Spl . C.C. NO. 35 /2014

அசா : 4

பெயர்:குமார் தொழில் அரசு பணி

தகப்பனார் பெயர் : R. கருப்பையா மதம்: இந்து

கிராமம்: பாண்டியம்பட்டி காலனி வயது : 45

தாலுகா: அய்யம்பட்டி தேதி: 02.02.2016

1873 ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10 ன் படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் வனக் கோட்டத்தில் உதவியாளராக பணிபுரிகிறேன். 2004 ம் வருடம் கொடைக்கானல் மாவட்ட வன அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்தேன். ஊழல் தடுப்பு துணை கண்காணிப்பாளர் வேண்டுகோளின் பேரில் கொடைக்கானல் மாவட்ட வன அலுவலர் உத்தரவின் பேரில் எதிரியின் ஊதிய விவர பட்டியல் 1.8.95 முதல் 1.12.2001 முடிய உள்ளதை கண்காணிப்பாளர் கையொப்பம் பெற்று 18.2.2003 அன்று துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்தேன். அந்த கோப்பு அதசாஆ.9. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

அதசாஆ.9 ஆவணத்தை நான் கையொப்பம் இட்டு வழங்கவில்லை என்றால் சரிதான். அதசாஆ 9 ஆவணம் அசலுடன் ஒப்பு நோக்கி சான்று வழங்கியதாக இல்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் கண்காணிப்பாளராகவும் பணியாற்றவில்லை என்றால் சரிதான். 1995 முதல் 2001 ம் ஆண்டு வரை நான் கொடைக்கானல் வன கோட்டத்தில் பணியாற்றவில்லை என்றால் சரிதான். அதசாஆ.9 ஆவணம் பற்றி சாட்சியம் அளிக்க எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல.

2/2/16

Typed down to my dictation, in my presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

Chief Judicial Magistrate
Dindigul
02/02/16

## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

Spl. C.C. NO. 35/2014

அசா : 5
பெயர்: திரு.எஸ்.கணேசன்
தகப்பனார் பெயர் : 5 சித்தன்,
கிராமம்: 392 சித்தன் இல்லம்,
தாலுகா: பாண்டு நகர் தெரு 86,
மணியனூர் PO, சேலம் 636010

தொழில்: மாவட்ட பதிவாளர் (ஓய்வு)
மதம் : இந்து
வயது : 66
தேதி : 07.04.2016

1873ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10ன் படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

முதல் விசாரணை

நான் சேலத்தில் பதிவு துறையில் மாவட்ட பதிவாளராக பணிபுரிந்து கடந்த 2008ம் வருடம் பணி ஓய்வு பெற்று தற்போது சேலத்தில் குடி இருந்து வருகிறேன். 17.4.2007ம் தேதியன்று சேலத்தில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சேலம் நம்பர் 1 இணை பதிவாளருக்கு ஒரு கடிதம் வந்தது. மேற்படி கடிதத்தில் விற்பனை ஆவணம் பற்றிய ஆவணம் கேட்கப்பட்டு இருந்தது. சேலம் டவுன் அய்யம்பெருமாள்பட்டி கிராமம் சர்வே எண்.TS No. 38, A Block 6, Ward A, 6085 சதுர அடி நிலமானது 1992 ம்வருடம் ஆவண எண். 288 ல் சி.மரகதம்மாள் க/பெ.சொக்கலிங்கம் கிரையம் பெற்று இருந்தார். மேற்படி சொத்தின் மதிப்பு ரூ.1,30,000/-. மேற்படி கிரையத்திற்கு ரூ.19790- முத்திரைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.10. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

மேற்படி பத்திரம் பதிவு செய்யும் காலத்தில் நான் அந்த சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். பத்திரம் பதிவு செய்யப்பட்ட காலத்தில் வழிகாட்டி மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. வழிகாட்டி மதிப்பில் நிலம், காலத்திற்கேற்ப மதிப்பு மாறும் என்றால் சரிதான்.

[signature] 7/4/16.

typed down to my dictation, in the presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

[signature]

Chief Judicial Magistrate
Dindigul
07/04/16

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**Spl.C.C. NO.35 /2014**

அ.சா. 6
பெயர்: சங்கரமூர்த்தி
தகப்பனார் பெயர் : V. சேதுராம் நாடார்
கிராமம்: தேனி P.C.Petty
தாலுகா: தேனி

தொழில் அரசு பணி செய்வு
மதம் : இந்து
வயது : 66
தேதி :22.12.2016

1873ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

முதல் விசாரணை :

நான் தற்போது தேனி மாவட்டத்தில் குடி இருக்கிறேன். பெரியகுளம் தாலுகா குன்னப்பன் கிராம நிர்வாக அதிகாரியாக 2006ல் நான் பணியாற்றினேன். 8.12.2007ம் தேதி திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் குற்ற எண். 105/2005 எதிரி சொக்கலிங்கம் அவரது மனைவி மரகதம் , மகன் தினேஷ் குமார் ஆகியோர் பெயரில் குள்ளப்பன் கிராமம் உட்கடை ஏ.வாடிப்பட்டி கிராமத்தில் வாங்கி உள்ள சொத்துக்களை பார்வையிட என்னை அழைத்தார்.மேற்படி இடத்திற்கு சென்றோம். P.W.D செயற்பொறியாளர் கணேசன், சர்வேயர் பாலகுரு, சொக்கலிங்க பிரதிநிதி குமார், உடன் இருந்தார்கள்.மேற்படி இடம் கல்தூண் ஊன்றி முள்வேலி போடப்பட்டு இருந்தது. மேற்படி பட்டா நிலத்தில் அரசு புறம்போக்கு நிலங்கள் இருந்ததால் சர்வேயரை வைத்து அளந்து கணக்கெடுக்க முடிவு செய்யப்பட்டது. மதியம் 1 மணியில் இருந்து 2.30 மணி வரை பார்வையிடப்பட்டது. அந்த அறிக்கையில் நான் கையொப்பம் செய்தேன். அந்த அறிக்கை அதசாஆ.11. மறுபடியும் 9.1.08 கண்காணிப்பு ஆய்வாளர் விசாரணைக்கு செல்ல கூப்பிட்டார். நாங்கள் சென்றோம். நிலங்களை சர்வேயர்கள் பாலகுரு மற்றும் அன்பழகன ஆகியோர் அளந்தார்கள். P.W.D செயற்பொறியாளர் கணேசன் பார்வையிட்டார். ஆர்.ஐ.தனுஸ்கோடி, ஆய்வாளர் சத்தியசீலன், விஏஓ பரசுராம் ஆகியோர் உடன் இருந்தார்கள். மேற்கண்ட நிலத்தில் 89 ஏக்கர் 56 செண்ட் புஞ்சை பட்டா நிலமும், அரசு புறம்போக்கு நிலம் 50 ஏக்கர் 33 செண்ட்டும் இருந்தது. 7 நபர்களான வீரசின்னு மகன் ரத்தினம், தங்கமணி மகன் விஜயராம், கண்ணன் மகள் ராக்கம்மாள், கருப்பணன் மகன் நாகராஜ், கரவாயன் மகன் பூவலிங்கம் , வெள்ளைச்சாமி மகன் ராசு , தவமணியின் மனைவி முருகேஸ்வரி யை பற்றி விசாரிக்க அவர்கள் ஊரில் இல்லை என்ற விவரம் தெரிய வந்தது. மேலும் சுப்பன் மகன் பரதேசி, நரசிம்மன் மகன் காளிமுத்து

22/12/16

,சொக்கலிங்கம் மகன் பால்ச்சாமியை பற்றி விசாரிக்க அவர்கள் இறந்ததாக தெரிய வந்தது. நான் ஆய்வு நடவடிக்கையில் கையொப்பம் செய்தேன். புல்லபுரம் கிராமத்தில் தயாரிக்கப்பட்ட அறிக்கை அதசா்ஆ.12. நரசிம்மன் மகன் காளிமுத்து,இறந்து விட்டார் என்ற சான்று அதசாஆ.13. சொக்கலிங்கம் மகன் பால்ச்சாமி இறந்ததற்கான சான்று அதசாஆ.14.இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

அதசாஆ.11 மற்றும் அதசாஆ.12 ஐ நான் தயாரிக்கவில்லை என்றால் சரிதான்.இரண்டுமே பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தயாரித்த அறிக்கை என்றால் சரிதான்.அதசாஆ.12 ஐ தயார் செய்யும் போது இருந்த நபர்கள் அனைவரும் அரசு அலுவலர்கள் என்றால் சரிதான். இந்த இரண்டு ஆவணத்திலும் பல சர்வே நம்பர்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணத்திலும் கூறப்பட்டுள்ள இடங்களுக்கு நான்குமால்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த இரண்டு ஆவணத்திலும் கூறப்பட்டுள்ள இடங்களுக்கு விஸ்தீரணம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதே போல் சில ஆட்கள் ஊரில் இல்லை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதசாஆ.11 மற்றும் அதசாஆ.12ல் சில ஆட்கள் ஊரில் இல்லை என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். கல்தூண் மற்றும் முள்வேலியும் எந்தெந்த நிலங்களுக்கு எவ்வளவு விஸ்தீரணங்களுக்கு போடப்பட்டு இருந்தது என்று இரண்டு ஆவணத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த இரண்டு ஆவணங்களிலும் குறிப்பிட்டுள்ள நிலங்களில் சர்வே எண் குறிப்பிட்டு நட்டுவைக்கவில்லை என்றால் சரிதான். இரண்டு ஆவணத்தை பொறுத்த மட்டில் நிலங்களுக்கு உரிமையாளர் யார் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன முறையில் சொன்ன விதத்தில் எந்த ஆவணமும் தயாரிக்கவில்லை என்றும் லஞ்ச ஒழிப்பு அதிகாரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் இட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

26/12/16

Typed down to my dictation, in my presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

Chief Judicial Magistrate
Dindigul
2/12/16

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்
Spl.C.C. NO. 35 /2014

அ.சா. 7
பெயர்: நாகராஜன்
தகப்பனார் பெயர் : கருப்பணன்
கிராமம்: சின்னாளபட்டி
தாலுகா: ஆத்தூர்வட்டம்

தொழில் சார்பதிவாளர் (ஓய்வு)
மதம் : இந்து
வயது : 66
தேதி :05.01.2017

1873ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

முதல் விசாரணை :

நான் தற்போது சின்னாளபட்டியில் தென்றல் தெருவில் குடி இருக்கிறேன்.7.8.2006 முதல் வத்தலக்குண்டு சார்பதிவாளராக பணியாற்றினேன். எனக்கு முன்னால் சோனைமுத்து என்பவர் பணியாற்றினார். அவர் 19.8.06ல் சிவகாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த போது காலமாகி விட்டார். அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். அவர் பதிவு செய்த ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு விவரங்கள் ஆய்வாளர் ரத்தினகுமாரிடம் என்னால் தெரிவிக்கப்பட்டது. ஆவண எண் 677/01 நாள் 09.4.01 கிரையம் ரூ40400- விராலிபட்டி கிராமம் சர்வே எண்.580, 1.63.5 ஏர்ஸ்க்கு 4 ஏக்கர் 4 செண்ட் புஞ்சை நிலம் மேற்படி நிலத்தை வி.ஏ.ராமசாமி என்பவர் விற்றார்.ராமநாயக்கன்பட்டியை சேர்ந்த அழகர்சாமி மனைவி பழனியம்மாள் மகன் ராமசாமி மற்றும் பழனியம்மாள் ஆகியோர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி நிலத்திற்கு முத்திரை தீர்வையாக ரூ.4718-மும், பதிவுக்கட்டணமாக ரூ.405-ம் செலுத்தப்பட்டுள்ளது.மேற்படி ஆவணம் அதசாஆ. 15.

ஆவண எண்.774/01 கிரையம் ரூ.15000- நாள் 24.4.01, விராலிப்பட்டி கிராமம் சர்வே எண் 578/1,2,3 விஸ்தீரணம் 1.50 ஏக்கர் புஞ்சை நிலத்தை ராமநாயக்கன்பட்டி பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார். அதற்கு முத்திரை கட்டணம் ரூ.1800-மும் பதிவு கட்டணம் 250-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணம் அதசாஆ.16.

ஆவண எண். 275/01, நாள் 24.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 592/2, 593/2, 579/1 ,594/1 விஸ்தீரணம் 2 ½ ஏக்கர் நிலத்தை பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார். அதற்கு முத்திரை கட்டணம் ரூ.3000-மும் பதிவு கட்டணம் 330-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணம் அதசாஆ.17.

ஆவண எண். 776/01, நாள் 26.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 589/1 ய, 589 /1 பி, 589 /1 சி , 579/1 விஸ்தீரணம் 3 ஏக்கர் நிலத்தை பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தைரூ30000 க்கு கிரையம் கொடுத்துள்ளார். அதற்கு முத்திரை கட்டணம் ரூ.3600-மும் பதிவு கட்டணம் 400-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணம் அதசாஆ.18.

ஆவண எண். 777/01, நாள் 26.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 592/2, 593/2, 589/1 எ ,578/2,578/3 விஸ்தீரணம் 2 ,55 ஏக்கர் நிலத்தை பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை ரூ. 25000 க்கு கிரையம் கொடுத்துள்ளார். அதற்கு முத்திரை கட்டணம் ரூ.3000-மும் பதிவு கட்டணம் 370-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.19.

ஆவண எண். 778/01, நாள் 26.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 592/2, 589/1 பி 589/1 சி ,581/2 எ,591/2, 592/2, 581/2 எ, 581/2 பி விஸ்தீரணம் 6 ஏக்கர் நிலத்தை பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை ரூ60000 க்கு கிரையம் கொடுத்துள்ளார். அதற்கு முத்திரை கட்டணம் ரூ.7200-மும் பதிவு கட்டணம் 760-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.20.

ஆவண எண். 779/01, நாள் 26.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 578/3, 578/1, 578/2, விஸ்தீரணம் 1 ½ ஏக்கர் நிலத்தை பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை ரூ15000 க்கு கிரையம் கொடுத்துள்ளார். அதற்கு முத்திரை கட்டணம் ரூ.1800-மும் பதிவு கட்டணம் 230-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.21.

ஆவண எண். 780/1, நாள் 25.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 591/2, 593/2, விஸ்தீரணம் 3 ஏக்கர் நிலத்தை பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை ரூ30000 க்கு கிரையம் கொடுத்துள்ளார். அதற்கு முத்திரை கட்டணம் ரூ.3600-மும் பதிவு கட்டணம் 420-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.22.

ஆவண எண். 781, நாள் 27.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 578/3,578/2,579/1, விஸ்தீரணம் 1 ½ ஏக்கர் நிலத்தை பி.டி.தாமஸ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டம் திருக்காலம்பூர் கிராமம் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை ரூ15000க்கு கிரையம் , முத்திரை கட்டணம் ரூ.1800 ம் பதிவுகட்டணம் ரூ.210-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.23.

ஆவண எண். 782/1, நாள் 27.4.01 விராலிபட்டி கிராமம் சர்வே எண்கள் 595/3 எ1, 3எ2,3எ3 விஸ்தீரணம் 4,12 ஏக்கர் நிலத்தை நிலக்கோட்டை வட்டம் விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டி கிராமம் சுப்பையமூப்பன் மகன் பாண்டி என்பவர் சொக்கலிங்கம் மனைவி மரகதம் அவர்களுக்கு மேற்படி நிலத்தை ரூ1,13,712-க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.13700- பதிவு கட்டணம் ரூ.1140-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.24.

ஆவண எண். 2581/2000, நாள் 29.12.2000, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் சமயமூப்பர் மகன் பரமசிவம் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 595/3 பி1, பி2,பி3, 595/சி 1, ,3சி2, 3சி3 விஸ்தீரணம் 2,44 ஏக்கர் நிலத்தை ரூ67344க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 8775 பதிவு கட்டணம் ரூ.120-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.25.

ஆவண எண். 52/2001, நாள் 10.1.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் சமயமூப்பர் மகன் சங்கிலி எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 595/3 பி 1, 3 பி2, 3 பி3, 3சி1, 3சி2,3சி3 விஸ்தீரணம் 2,43 ஏக்கர் நிலத்தை ரூ. 67008க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 8060 பதிவு கட்டணம் ரூ.795-ம் செலுத்தப் பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.26.

ஆவண எண். 138/2001, நாள் 29.1.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ்குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் இருளப்பன் குமாரர் வீரணன் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 552/2, விஸ்தீரணம் 2,52 ஏக்கர் நிலத்தை ரூ. 25200க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 3050 பதிவு கட்டணம் ரூ.255-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த

கிரைய ஆவணம் அதசாஆ.27.

ஆவண எண். 139/2001, நாள் 30.1.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ்குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் பெரியசாமி குமாரர் வீரணன், வீரணன் மகன் கருப்பணன் ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 1365/3பி2, 13, 1365 /3பி2 12, 1365./3பி2 18, 1365./3பி2 51, விஸ்தீரணம் 1 .35 ஏக்கர் நிலத்தை ரூ. 13500க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 1620 பதிவு கட்டணம் ரூ. 135-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.28..

ஆவண எண். 196/2001, நாள் 8.1.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ்குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் சமயமூப்பர் மகன் கசுவன், கசுவன் மகன் வீரணன் ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 560/5, விஸ்தீரணம் 1.83 ஏக்கர் நிலத்தை ரூ. 18300க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 2200- பதிவு கட்டணம் ரூ. 185-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.29.

ஆவண எண். 251/2001, நாள் 14.2.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ்குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் சமயமூப்பர் மகன் சங்கிலி எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 560/6, விஸ்தீரணம் 2.36 ஏக்கர் நிலத்தை ரூ. 23600க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 2850- பதிவு கட்டணம் ரூ. 240-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.30.

ஆவண எண். 259/2001, நாள் 13.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ்குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் குமராண்டி நாயக்கர் மகன் படிவநாயக்கர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 611 விஸ்தீரணம் 71 செண்ட் நிலத்தை ரூ. 7100க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 860- பதிவு கட்டணம் ரூ. 75-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.31.

ஆவண எண். 266/2001, நாள் 14.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ்குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் இருளப்பன் மனைவி மீனாட்சியம்மாள் , இருளப்பன் குமாரர் குருநாதன் மற்றும் குருநாதன் மகன் ராஜா ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 555/7 பி, 7 பி1, 7 எ, விஸ்தீரணம் 2.63 செண்ட் நிலத்தை ரூ. 26300 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 3200- பதிவு கட்டணம் ரூ. 265-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.32.

ஆவண எண். 267/2001, நாள் 14.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் இருளப்பன் மனைவி மீனாட்சியம்மாள் , இருளப்பன் குமாரர் குருநாதன் மற்றும் குருநாதன் மகன் ராஜா ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 559/8 எ, 559/8 பி , 559/9 எ, 559/10 பி, 559/11, விஸ்தீரணம் 6.35 ஏக்கர் நிலத்தை ரூ. 187000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 22500- பதிவு கட்டணம் ரூ. 1875-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.33.

ஆவண எண். 282/2001, நாள் 19.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் இருளப்ப மூப்பர் மகன் பெரியமாசாணம் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 608/1 டி, , விஸ்தீரணம் 81 செண்ட் நிலத்தை ரூ. 8100 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ. 1000- பதிவு கட்டணம் ரூ. 85-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.34.

ஆவண எண். 299/2001, நாள் 20.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் மாசாணம் மகன் மொக்கை, மொக்கை மகன் சின்னக்காளை ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 1373/2 ஐ, 1373/2 கே, விஸ்தீரணம் 91 செண்ட் நிலத்தை ரூ. 9100 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.1100 - பதிவு கட்டணம் ரூ.95 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.35.

ஆவண எண். 304/2001, நாள் 21.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் மாசாணம், ரத்தினம், குருநாதன், ராஜா,தங்கராஜ், சின்னதங்கராஜ் ,செல்வராஜ், ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 575/1, 576, 577/1 சிக்கு தற்போதைய **UDR** படி 577/1 சி3, 575/3, விஸ்தீரணம்10,58 செண்ட் நிலத்தை ரூ. 2,20,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.26500 - பதிவு கட்டணம் ரூ.2225 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.36.

ஆவண எண். 306/2001, நாள் 21.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் குருநாதன், மாசாணம், எம்.ரத்தினம், ராஜா, ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 577/2, தற்போதைய **UDR** படி 577/2 எ, விஸ்தீரணம் 52 செண்ட் நிலத்தை ரூ. 5200 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.650 - பதிவு கட்டணம் ரூ.55 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.37.

ஆவண எண். 381/2001, நாள் 01.03.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் சின்னகருப்பன், எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 1373/2**H** 1373/2**J**. விஸ்தீரணம் 90 செண்ட் நிலத்தை ரூ. 9000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.1100 - பதிவு கட்டணம் ரூ.90 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.38.

ஆவண எண். 395/2001, நாள் 02.03.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் குருநாதன் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 607/3, . விஸ்தீரணம் 99 செண்ட் நிலத்தை ரூ. 9900 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.1300 - பதிவு கட்டணம் ரூ.120 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.39.

ஆவண எண். 396/2001, நாள் 28.02.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் மாயாண்டி மகன் முத்து இருளன் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 577/3, விஸ்தீரணம்1 .75 ஏக்கர் நிலத்தை ரூ. 9900க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.2100 - பதிவு கட்டணம் ரூ.175 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.40.

ஆவண எண். 551/2001, நாள் 21.03.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் சமயமூப்பர் மகன் ஆண்டி எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 560/3, விஸ்தீரணம் 24 செண்ட் நிலத்தை ரூ. 3600க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.450 - பதிவு கட்டணம் ரூ.40 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.41.

ஆவண எண். 552/2001, நாள் 20.03.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் மாசாணம் ,ரத்தினம், நல்லமணி, ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 534/4 டி, விஸ்தீரணம் 87 செண்ட் நிலத்தை ரூ. 34000க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.4150 - பதிவு கட்டணம் ரூ.345 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.42.

ஆவண எண். 553/2001, நாள் 21.03.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் இருளப்பன் மனைவி பாப்பு என்ற அங்கம்மாள், செல்வராஜ் ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 574/2பி விஸ்தீரணம் 61 செண்ட் நிலத்தை ரூ. 23000க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.2804 - பதிவு கட்டணம் ரூ.255 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.43.

ஆவண எண். 649/2001, நாள் 03.04.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம்

கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் சின்னக்காளை என்ற குருநாதன் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 607/3, 1372/3 எ, விஸ்தீரணம் 3,81 ஏக்கர் நிலத்தை ரூ. 38100 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.4572 - பதிவு கட்டணம் ரூ.425 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.44.

ஆவண எண். 880/2001, நாள் 18.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் கருப்பமூப்பன்பட்டியில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 551/1 சி, 551/1 எ,551/1 பி, 582/2 பி,580/1,580/8, விஸ்தீரணம் 10.47 ஏக்கர் நிலத்தை ரூ. 1,04,700 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.12570 - பதிவு கட்டணம் ரூ.1050 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.45.

ஆவண எண். 881/2001, நாள் 17.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 580/3, 589/1 எ, 589/1 பி, 589/1 சி, 592/2, 593/2, 589/3 எ, 589/3 சி, ,591/1 எ, 591/1 சி, 586/1 பி, 593/1, 589/3 பி, விஸ்தீரணம் 7.87 ஏக்கர் நிலத்தை ரூ. 1,04,700 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.9450 - பதிவு கட்டணம் ரூ.950 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.46.

ஆவண எண். 931/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 550/5, விஸ்தீரணம் 1.50 ஏக்கர் நிலத்தை ரூ. 15,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.1800 - பதிவு கட்டணம் ரூ.210 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.47.

ஆவண எண். 932/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 551/2, 579/1, 550/5, விஸ்தீரணம் 1 ½ ஏக்கர் நிலத்தை ரூ. 15,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.1800 - பதிவு கட்டணம் ரூ.230 -ம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த கிரைய ஆவணம் அதசாஆ.48.

ஆவண எண். 933/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 551/2, 579/1, 550/5, 551/2, விஸ்தீரணம் 1 ½ ஏக்கர் நிலத்தை ரூ. 15,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.1800 - பதிவு கட்டணம் ரூ.230 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.49.

ஆவண எண். 934/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 551/2, விஸ்தீரணம் 1 ½ ஏக்கர் நிலத்தை ரூ. 15,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.1800 - பதிவு கட்டணம் ரூ.210 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.50.

ஆவண எண். 935/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 550/5, 579/1, 551/2 , விஸ்தீரணம் 2 ஏக்கர் நிலத்தை ரூ. 20,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.2400 - பதிவு கட்டணம் ரூ.300 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.51

ஆவண எண். 936/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 591/1 எ,1 பி, 593/1, 593/2, விஸ்தீரணம் 2 ஏக்கர் நிலத்தை ரூ. 20,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.2400 - பதிவு கட்டணம் ரூ.280 -ம் செலுத்தப் பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.52,

ஆவண எண். 937/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு

காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 591/1 சி, 1 பி, 581/2 பி, 589/1 சி, 581/2 எ விஸ்தீரணம் 2 ஏக்கர் நிலத்தை ரூ. 20,000 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.2400 - பதிவு கட்டணம் ரூ.300 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.53.

ஆவண எண். 938/2001, நாள் 30.5.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு வத்தலக்குண்டு காந்திநகரில் வசிக்கும் பி.டி.தாமஸ் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 595/3 பி,4,595/3 சி4, , விஸ்தீரணம் 1 ஏக்கர் நிலத்தை ரூ. 27600 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.3320 - பதிவு கட்டணம் ரூ.340 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.54.

ஆவண எண். 967/2001, நாள் 4.6.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டி கிராமம் பூவம்பட்டியில் வசிக்கும் அய்யாவு என்ற சுப்பையா கவுண்டர் மகன் பன்னீர்சாமி, பன்னீர்சாமி மனைவி முத்தம்மாள் ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 557/1 எ,1 பி,1 சி, 1**E**,1**F**,1**H** விஸ்தீரணம் 3 ஏக்கர் 2 செண்ட் நிலத்தை ரூ. 30200 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.3594 - பதிவு கட்டணம் ரூ.305 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.55.

ஆவண எண். 1443/2001, நாள் 17.08.2001, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருக்கலம்பூர் கிராமம் தச்சம்பட்டியில் குடி இருக்கும் சொக்கலிங்கம் குமாரர் சொ.தினேஷ் குமார் என்பவருக்கு விராலிபட்டியில் உள்ள கருப்ப மூபப்ன்பட்டியில் வசிக்கும் ஆண்டிமூப்பர் மகன் ராமுக்காளை, வீரணன் மகன் சுருளியாண்டி, ஆகியோர் எழுதிக் கொடுத்தது. சர்வே எண்கள் 1373/2 எ, 1373/2 டி, 1373/2 பி, 1373/2 இ, 1373/2 சி, 1373/2**G**.1373/2**F** விஸ்தீரணம் 2 ஏக்கர் 69 செண்ட் நிலத்தை ரூ. 26900 க்கு கிரையம் முத்திரை கட்டணம் ரூ.3250 - பதிவு கட்டணம் ரூ.270 -ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் அதசாஆ.56.

சென்னை பதிவு துறை தலைவர் அவர்களால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை அதசாஆ.57.பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கையும், தமிழ்நாடு அரசிதழ் எண்.28 ஐயும் என்னிடம் காண்பித்து ராஜா முகமது ஆய்வாளர் விவரங்கள் கோரினார். அப்போது அந்த கடிதங்களை படித்து பார்த்து நான் 14.4.2001 முதல் சொத்தை எழுதி

வாங்குபவரும் சொத்தை எழுதி கொடுப்பவரும் பதிவு அலுவலகத்தில் ஆஜராகி கையொப்பமிட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. மேற்படி பதிவு திருத்தச் சட்டத்தின்படி எழுதி கொடுப்பவரும், எழுதி வாங்குபவரும் பதிவு அலுவலகத்தில் பதிவாளர் முன்பு ஆஜராகி கையொப்பமிடப்பட்டு சம்மதத்தை தெரிவிக்க வேண்டும்.அவ்வாறு கையொப்பமிட ஆஜராகவில்லை என்றால் மேற்படி ஆவணம் பதிவுக்கு அனுமதிக்கப்படமாட்டாது என்ற விவரத்தை நான் ஆய்வாளரிடம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை

அதசாஆ.15 முதல் அதசாஆ.56 வரை கிரைய ஆவணங்கள் பதிவு செய்த போது வத்தலக்குண்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் பணிபுரியவில்லை என்றால் சரிதான்.பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஏப்ரல் முதல் ஆகஸ்டு மாதம் 2001 வரை பதிவு செய்யப்பட்டவை என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தனித்தனியே மரகதம் மற்றும் தினேஷ் குமார் பெயரில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பதிவுகளில் சொக்கலிங்கம் என்ற பெயரில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பத்திரபதிவு துறையை பொறுத்து ஒருநபருக்காக மற்றொரு நபர் சொத்து வாங்கவோ , விற்கவோ என்றால் **power of Attorny** மூலம் தான் செய்ய முடியும் என்றால் சரிதான். அதசாஆ.15 முதால் 56 வரை உள்ள ஆவணங்கள் மரகதம் மற்றும் தினேஷ் குமார் பெயரில் தனித்தனியே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அதசாஆ.15 முதால் 56 வரை உள்ள ஆவணங்களில் கண்டுள்ள இடத்தை ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. பத்தியபதிவு துறையில் கிரைய முத்திரை கட்டணமோ, பதிவு கட்டணமோ முறையாக செலுத்தும்பட்சத்தில் தான் அந்த பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை பத்திர பதிவு துறையில் விடுவிப்பார்கள் என்றால் சரிதான். நான் பார்த்த வகையில் அதசாஆ.15 முதல் அதசாஆ.56 வரை உள்ள ஆவணங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு சட்டத்திற்குட்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.தமிழக அரசிடம் இருந்து பத்திரபதிவு துறைக்கு அவ்வப்போது சுற்றறிக்கை கொடுக்கப்படும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் பதிவு துறை அலுவலர்கள் செயல்படுவார்கள் என்றால் சரிதான்.பத்திரத்தை யார் பதிகிறார்களோ அல்லது அவரின் அங்கீகாரம் பெற்றவர்களோ அந்த பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம் என்றால் சரிதான்.

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct

Chief Judicial Magistrate
Dindigul
05/01/17

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**Spl.C.C.** 35 /2014

**Prosecution Witness** : 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. குருநாதன் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு.வெங்குடுசாமி | **Calling** | : | மைக்செட் தொழில், விவசாயம் |
| **Village** | : | நிலக்கோட்டை | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 71 |
| | | | **Dated** | : | 09.09.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 61, திரு.குருநாதன் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 8 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மைக்செட் மற்றும் விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பட்டியல் ஆவண எண் 120 ல். உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது இல்லை. விராலிபட்டியில் சர்வே எண். 579/2 ல் புறம்போக்கில் உள்ள 3 ஏக்கர் நிலம் எனக்கு சொந்தமாக இருந்தது. இறந்து போன பட்டியல் சாட்சி 56 கண்ணம்மாள் என் தாயார் பெயரில்

மேற்படி நிலத்தின் பட்டா இருந்தது. நான் வீட்டிலிருந்த போது ஒரு வாரத்திற்கு முன்பு போலீசார் என் வீட்டிற்கு வந்து என் நிலத்தை நான் பணம் கொடுத்து வாங்கியதாக சாட்சி சொல்ல அழைத்தார்கள். நான் என் நிலத்தை பணம் கொடுத்து வாங்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எப்பொழுதும் விசாரிக்கவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்த போது மேற்படி சர்வே எண்ணில் உள்ள 2 ஏக்கர் 96 செண்ட் புன்சை புறம்போக்கு நிலத்தை 09.04.2001 ம் தேதி ரூபாய் 15,000/-ற்கு எதிரியிடம் கொடுத்துவிட்டோம் என்றும், கிரையத் தொகை ரூ. 15,000/- வாங்கியதில் என் அம்மா கண்ணம்மாலிற்கு ரூ. 3,000/- நான் கொடுத்ததாகவும், பத்திரம் என் அம்மா பெயரில் எழுதி கொடுத்து அதில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்றும், மேற்படி பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றும், அதில் என் தாயாரிடம் கைரேகை வாங்கவில்லை என்றும், மேற்படி பத்திரத்தை எதிரியின் மகன் தினேஷ் குமார் பெயரில் எழுதி அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டுவிட்டு தற்போது எதிரியிடம் ஆதாயம் பெற்றுக் கொண்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, in the presence and hearing and under my personal direction and Superintendence, and interpretation the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.

**Spl.C.C.** 35 /2014

**Prosecution Witness** : 9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுப்புராயன் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு.சின்னகருப்பன் | **Calling** | : | |
| **Village** | : | விராலிபட்டி | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 67 |
| | | | **Dated** | : | 09.09.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 63, திரு.சுப்புராயன் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 9 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நிலக்கோட்டை சித்தர்கள் நத்தம் பகுதியில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிவிட்டு கடந்த 31.08.2015 தேதியில் ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 05.02.2007 முதல் வத்தலகுண்டு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக வேலை செய்த போது கூடுதல் பொறுப்பாக விராலிபட்டி கிராமத்தை கவனித்தேன். குமராண்டி நாயக்கர் மகன் படிவ நாயக்கர் என்பவர் விராலிபட்டி மேற்கு தெருவில்

9.9.2024

குடியிருந்து வருகிறாரா என இந்த வழக்கின் ஆய்வாளர் என்னிடம் கேட்டார். நான் மேற்படி நபரை பற்றி விசாரணை செய்து விட்டு அவர் விராலிபட்டி கிராமத்தில் குடியிருக்கவில்லை என சான்று அளித்தேன். அது அ.த.சா.58. சமயன் மகன் ஆண்டி என்பவர் கருப்பன் மூப்பன்பட்டியில் குடியிருந்து வருகிறாரா என இந்த வழக்கின் ஆய்வாளர் என்னிடம் கேட்டார். நான் மேற்படி நபரை பற்றி விசாரணை செய்து விட்டு அவர் 27.03.2007 ல் இறந்துவிட்டார் என சான்று அளித்தேன். அவரது இறப்பு சான்றிதழ் அ.த.சா.59. நான் வழங்கிய சான்றிதழ் அ.த.சா.60. அழகர் ஆசாரியின் மனைவி பழனியம்மாள் என்பவர் விராலிபட்டியில் குடியிருந்து வருகிறாரா என இந்த வழக்கின் ஆய்வாளர் என்னிடம் கேட்டார். நான் மேற்படி நபரை பற்றி விசாரணை செய்து விட்டு அவர் இறந்துவிட்டார் என தெரிய வந்ததால் அவர் இறந்து விட்டார் என சான்று அளித்தேன். இந்த வழக்கில் 08.12.2007 தேதியில் காலை 11 மணியிலிருந்து 12.45 மணிக்குள் சின்னாளபட்டி பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் திரு.கணேசன், விருவீடு பிர்கா சர்வேயர் பாலகுரு, திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் திரு. ராஜாமுகமது மற்றும் சொக்கலிங்கம் மனைவி மரகதம் மற்றும் அவரது மகன் தினேஷ் குமார், மருமகன் வி. குமார் ஆகியோருடன் விராலிபட்டியில் உள்ள மேற்படி சொக்கலிங்கம் மனைவி மற்றும் அவரது மகன் தினேஷ்குமார் ஆகியோர் பெயரில் உள்ள இடத்தை பார்வையிட்டோம். அந்த இடம் கல்துண் ஊன்றி, முள் கம்பி வேலி போடப்பட்டிருந்தது. ஆய்வாளர் மேற்படி விவரங்களை பதிவு செய்த ஆவணத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டு அதில் ஒரு நகலை மேற்படி வி. குமாருக்கு கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதுதான். அதிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணம் **Ex**.61.

கடந்த 09.01.2008 ம் தேதி காலை 10.30 மணி முதல் 01.30 மணி வரை

தேனி செயற் பொறியாளர் அவர் பெயர் தெரியாது, ஒரு 6 பேர் கொண்ட குழுவாக விராலிபட்டி கிராமத்திற்கு வந்தனர்.

அவர்களுடன் விருவீடு பிர்கா சர்வேயர் பாலகுரு, வருவாய் ஆய்வாளர் திரு. தனுஷ்கோடி திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் திரு. சத்தியசீலன் மற்றும் சொக்கலிங்கம் மனைவி மரகதம் மற்றும் அவரது மகன் தினேஷ் குமார் ஆகியோருடன் விராலிபட்டியில் உள்ள மேற்படி சொக்கலிங்கம் மனைவி மற்றும் அவரது மகன் தினேஷ்குமார் ஆகியோர் பெயரில் உள்ள இடத்தை சர்வே எண்கள் படி பார்வையிட்டோம். அந்த இடம் கல்துண் ஊன்றி, முள் கம்பி வேலி போடப்பட்டிருந்தது. மேற்படி நபர்களின் பட்டாநிலம் 171.31 ஏக்கர், பூமிதான நிலம் மற்றும் புறம்போக்கு நிலம் இரண்டையும் சேர்த்து மொத்தம் 183.34 ஏக்கர் ஆய்வு செய்ததில் அங்கு கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறு உள்ளதா என பார்வையிட்டோம். ஆய்வாளர் மேற்படி விவரங்களை பதிவு செய்த ஆவணத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதுதான். அதிலுள்ள மூன்றாம் கையெழுத்து என்னுடையதுதான். அதில் அங்கிருந்தவர்களும் கையெழுத்து போட்டனர். மேற்படி நடவடிக்கை ஆவணம் **Ex**.62. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

பொதுவாக கிராமங்களில் நிரந்தரமாக குடியிருப்பவர்களை தவிர பிழைப்புக்காக அவ்வபோது சிலர் வருவதும் உண்டு, போவதும் உண்டு என்றால் சரிதான். அவை பற்றிய விவரங்கள் கிராமங்களில் இல்லாமல் இருக்காது என்றால் சரிதான். அ.த.சா.58 ல் நான் யார் யாரை விசாரித்தேன், எந்தெந்த ஆவணங்களை பார்வையிட்டேன் என்று குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். 08.12.2007 ம் தேதி மேற்படி ஸ்தல விசாரணைக்கு செல்வதற்காக லஞ்ச ஒழிப்பித்துறையிடம் என்னிடம் வேண்டுகோள் கடிதம் எதுவும் எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை, அதேபோல வருவாய் துறை பொதுப்பணித்துறை அதிகாரிகளும் தரவில்லை. அ.த.சா.61 ல் இரண்டாவது பக்கத்தில் நான் கையெழுத்து போட்டிருக்கிறேன், மற்ற நபர்களும் இரண்டாவது பக்கத்தில் மட்டும் கையெழுத்து போட்டிருக்கிறார்கள், முதல் பக்கத்திலும் மூன்று, நான்கு பக்கங்களிலும் யாரும் எந்த கையெழுத்தும் போடவில்லை என்றால் சரிதான். மூன்றாவது பக்கத்தில் உள்ள சர்வே எண் எந்த கிராமத்தில் உள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

09.01.2008 ம் தேதி மேற்படி ஸ்தல விசாரணைக்கு செல்வதற்காக லஞ்ச ஒழிப்புத்துறையிடம் என்னிடம் வேண்டுகோள் கடிதம் எதுவும் எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை, அதேபோல வருவாய் துறை பொதுப்பணித்துறை அதிகாரிகளும் தரவில்லை, வாய் மொழியாக சொன்னார்கள். அதற்கான ஆதாரம் இல்லை என்றால் சரிதான். அ.த.சா.62 ல் இரண்டு மற்றும் மூன்றாம் பக்கத்தில் நான் கையெழுத்து போட்டிருக்கிறேன், மற்ற நபர்களும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கத்தில் கையெழுத்து போட்டிருக்கிறார்கள், 1, 5, 6, 7 ஆகிய பக்கங்களில் யாரும் எந்த கையெழுத்தும் போடவில்லை என்றால் சரிதான். 5, 6, 7 பக்கங்களில் உள்ள நிலங்கள் எந்த கிராமத்தை சார்ந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் உள்ள நிலங்களின் சர்வே எண்கள் எந்த ஆவணங்களை பார்த்து பதிவு செய்யப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு இருக்கிறதா என அவ்வபோது நாங்கள் கண்காணிக்க வேண்டுமென்றால் பிரச்சனை வந்தால் பார்ப்போம். பிரச்சனையில்லை என்றால் கவனிக்க மாட்டோம். இதே நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் என் மீது தாக்கல்

செய்த ஒரு வழக்கு தற்போதும் நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். நான் ஏற்கனவே கூறியதுபோல இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் முறைப்படி தயார் செய்யப்படவில்லை என்றும், லஞ்ச ஒழிப்பு போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

9.9.2024

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**Spl.C.C.** 35 /2014

**Prosecution Witness :** 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.பாலகுரு | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு.குமாரசாமி | **Calling** | : | |
| **Village** | : | கே.ஆர். நகர் | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 71 |
| | | | **Dated** | : | 09.09.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 66, திரு.பாலகுரு ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 10 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொடைக்கானல் பகுதியில் பிர்கா சர்வேயராக பணியாற்றிவிட்டு கடந்த 30.04.2012 தேதியில் ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 22.06.2005 முதல் விருவீடு பிர்கா நிலக்கோட்டை தாலுகாவில் பிர்கா சர்வேயராக வேலை பார்த்தேன். 08.12.2007 தேதியில் காலை 11.00 மணியிலிருந்து 01.00 மணிக்குள் சின்னாளபட்டி பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் திரு. கணேசன், கிராம

நிர்வாக அலுவலர் சுப்புராயன், திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் மற்றும் சொக்கலிங்கம் மனைவி மரகதம் மற்றும் அவரது மகன் தினேஷ் குமார், மருமகன் வி. குமார் ஆகியோருடன் விராலிபட்டியில் உள்ள மேற்படி சொக்கலிங்கம் மனைவி மற்றும் அவரது மகன் தினேஷ்குமார் ஆகியோர் பெயரில் உள்ள இடத்தை பார்வையிட்டோம். அந்த இடம் கல்துண் ஊன்றி, முள் கம்பி வேலி போடப்பட்டிருந்தது. ஆய்வாளர் மேற்படி விவரங்களை பதிவு செய்த ஆவணத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டு அதில் ஒரு நகலை மேற்படி வி. குமாருக்கு கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதுதான். அதிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான்,( **Ex**.61).

கடந்த 09.01.2008 ம் தேதி காலை 10.30 மணி முதல் 01.30 மணிக்குள் தேனி செயற் பொறியாளர் அவர் பெயர் தெரியாது, அவருடன் ஒரு 3 பேர் சேர்ந்து ஒரு குழுவாகவும், கிராம நிர்வாக அலுவலர் சுப்புராயன் மற்றும் நான் மற்றும் சொக்கலிங்கம் மனைவி மரகதம் மற்றும் அவரது மகன் தினேஷ் குமார், ஆய்வாளர் சத்தியசீலன் ஆகியோருடன் விராலிபட்டியில் உள்ள மேற்படி சொக்கலிங்கம் மனைவி மற்றும் அவரது மகன் தினேஷ்குமார் ஆகியோர் பெயரில் உள்ள இடங்களை ஆய்வு செய்துவிட்டு அன்றே குள்ளபுரம் கிராமத்திற்கு ஆய்விற்காக சென்றோம். அங்கு ஆர்த்தி, அன்பளகன் ஆகியோர்களும் இருந்தனர். அந்த இடம் கல்துண் ஊன்றி, முள் கம்பி வேலி போடப்பட்டிருந்தது. ஆய்வாளர் மேற்படி விவரங்களை ஆவணத்தில் பதிவு செய்தார். அவ்வாறு பதிவு செய்த ஆவணத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதுதான். அதிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அதில் அங்கிருந்தவர்களும் கையெழுத்து போட்டனர்,(**Ex.P**12). இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

9.9.22

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

08.12.2007 ம் தேதி மேற்படி ஸ்தல விசாரணைக்கு செல்வதற்காக லஞ்ச ஒழிப்பித்துறையிடம் என்னிடம் வேண்டுகோள் கடிதம் எதுவும் எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை, அதேபோல வருவாய் துறை பொதுப்பணித்துறை அதிகாரிகளும் தரவில்லை. அ.த.சா.61 ல் இரண்டாவது பக்கத்தில் நான் கையெழுத்து போட்டிருக்கிறேன், மற்ற நபர்களும் இரண்டாவது பக்கத்தில் மட்டும் கையெழுத்து போட்டிருக்கிறார்கள், முதல் பக்கத்திலும் மூன்று, நான்கு பக்கங்களிலும் யாரும் எந்த கையெழுத்தும் போடவில்லை என்றால் சரிதான். மூன்றாவது பக்கத்தில் உள்ள சர்வே எண் எந்த கிராமத்தில் உள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.
09.01.2008 ம் தேதி மேற்படி ஸ்தல விசாரணைக்கு செல்வதற்காக லஞ்ச ஒழிப்புத்துறையிடம் என்னிடம் வேண்டுகோள் கடிதம் எதுவும் எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை, அதேபோல வருவாய் துறை பொதுப்பணித்துறை அதிகாரிகளும் தரவில்லை, வாய் மொழியாக சொன்னார்கள். அதற்கான ஆதாரம் இல்லை என்றால் சரிதான். அ.த.சா.62 ல் இரண்டு மற்றும் மூன்றாம் பக்கத்தில் நான் கையெழுத்து போட்டிருக்கிறேன், மற்ற நபர்களும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கத்தில் கையெழுத்து போட்டிருக்கிறார்கள், 1, 5, 6, 7 ஆகிய பக்கங்களில் யாரும் எந்த கையெழுத்தும் போடவில்லை என்றால் சரிதான். 5, 6, 7 பக்கங்களில் உள்ள நிலங்கள் எந்த கிராமத்தை சார்ந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் உள்ள நிலங்களின் சர்வே எண்கள் எந்த ஆவணங்களை பார்த்து பதிவு செய்யப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். **Ex.P**12 ல் பக்கம் இரண்டு மற்றும் நான்கில் மட்டும் தான் நானம் மற்றும் என் நபர்களும் கையெழுத்து போட்டிருக்கிறோம் என்றால்

சரிதான். 1, 3, 5 பக்கங்களில் நானும் மற்றவர்களும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். குள்ளப்புரம் கிராமம் தேனி மாவட்டத்தை சேர்ந்தது. என் ஆளுகைக்கு வராது. **Ex.P** 61,62 மற்றும் 12 ஆகிய ஆவணங்கள் எந்த ஆவணங்களை பார்த்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக ஒவ்வொரு கிராமத்தில் புறம்போக்கு நிலம் பட்டா நிலம் என்பவை தனியாக குறிப்பிடப்பட்ட ஆவணம் உள்ளது என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் உள்ளது. நான் ஏற்கனவே கூறியதுபோல இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் முறைப்படி தயார் செய்யப்படவில்லை என்றும், லஞ்ச ஒழிப்பு போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

9-9-24

Typed down to my dictation, in presence and hearing and under my personal direction and Superintendence, and interpreted to the witness in the presence of the accused as admitted by the witness to be correct

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,
## DINDIGUL.

**Spl.C.C.** 35 /2014

**Prosecution Witness :** 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சோமசுந்தரம் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு.ராமசாமி பிள்ளை | **Calling** | : | |
| **Village** | : | சமதர்ம புரம் | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | தேனி | **Age** | : | 72 |
| | | | **Dated** | : | 09.09.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 70, திரு.சோம சுந்தரம் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 11 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் தற்போது குடியிருந்து வருகிறேன். உத்தமபாளையம் மேல கூடலூர் தெற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிவிட்டு கடந்த 30.06.2009 தேதியில் ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2007 ஆண்டில் சின்னமனூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக வேலை செய்த போது குப்புசாமி மனைவி ராஜலட்சுமி என்பவர் சின்னமனூர் நகராட்சியில் குடியிருக்கிறாரா என்று யார் என்னிடம்

கேட்டார்கள் என்று நினைவில் இல்லை. நான் மேற்படி நபரை பற்றி விசாரணை செய்து விட்டு அவர் மேற்படி நகராட்சியில் குடியிருக்கவில்லை என சான்று அளித்தேன். அது அ.த.சா.63. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

பொதுவாக கிராமங்களில் நிரந்தரமாக குடியிருப்பவர்களை தவிர பிழைப்புக்காக அவ்வபோது சிலர் வருவதும் உண்டு, போவதும் உண்டு என்றால் சரிதான். அவை பற்றிய விவரங்கள் கிராமங்களில் இல்லாமல் இருக்காது என்றால் சரிதான். சின்னமனூர் நகராட்சியில் சுமார் 1 லட்சம் பேர் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அங்கு பல தெருக்களும் வார்டுகளும் உள்ளன என்றால் சரிதான். அ.த.சா.63 ல் நான் யார் யாரை விசாரித்தேன், எந்தெந்த ஆவணங்களை பார்வையிட்டேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே கூறியதுபோல இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் முறைப்படி தயார் செய்யப்படவில்லை என்றும், லஞ்ச ஒழிப்பு போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, in the presence and hearing and under my personal direction and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.

~~S.C.~~ /SPL.C.C. /~~C.C.~~ No. 35/14

Inspector Police
V&AC ..... Complainant

//vs//

Ad - [illegible] ..... Accused

| Sl. No. | Witness Rank | Name of the Witness | Date of Examination | Exhibit | Description of Exhibit |
|---|---|---|---|---|---|
| 1. | PW1 | பாலமுருகன் | 19.11.13 | P1 | [illegible] |
| 2 | PW2 | ஆறுமுகம் | 21.1.14 | P2 | [illegible] |
| ~~3~~ | | | | P3 | [illegible] |
| | | | | P4 | " |
| | | | | P5 | [illegible] |
| | | | | P6 | [illegible] |
| | | | | P7 | [illegible] |
| 3 | PW3 | [illegible] | 2.2.16 | P8 | [illegible] |
| 4 | PW4 | [illegible] | " | P9 | " |
| 5 | PW5 | [illegible] | 7.4.16 | P10 | [illegible] |
| 6 | PW6 | [illegible] | 22.12.16 | P11 | [illegible] |
| | | | | P12 | [illegible] |
| | | | | P13 | [illegible] |
| | | | | P14 | [illegible] |
| 7 | PW7 | [illegible] | 5.1.17 | P15 to ~~[illegible]~~ 57 | [illegible] |

Spl cc 35/14

LW61 - PW8 - முருகேசன் - 09.09.24

LW63 - PW9 - அய்யனார் - 09.09.24

P58 - VAO சான்று

P59 - ~~Death~~ Death certificate

P60 - ~~Death~~ VAO certificate

P61 - proceedings [illegible]

P62 - [illegible] [illegible]

LW66 - PW10 - [illegible] - 09.09.24

LW70 - PW11 - R. Soma Sundaram - 09.09.24

P63 - VAO சான்று